# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1277/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மணிமாறன் | த-பெ | காசி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 55/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | முதன்மை குடிமை மருத்துவர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026**

**எதிரி ஆஜர்.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து முதன்மை குடிமை மருத்துவராக காரைக்குடி அரசு மருத்துவமனையில் பணி செய்து வருகிறேன். நான் காரைக்குடி அரசு மருத்துவமனையில் கடந்த 06.06.2019 அன்று மாலை 3.05 மணிக்கு பணியில் இருந்த போது காரைக்குடி வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் இருந்து வடக்கு காவல் நிலையத்தில் பணிபுரியும் தலைமை காவலர் எண்.395 திரு.அழகர்சாமி என்பவர் மூலம் பெறப்பெற்ற தகவலை பெற்று காரைக்குடி வடக்கு காவல் நிலைய குற்ற எண்.191/2019 இதச பிரிவுகள் 279, 337, 304(A) வழக்கில் இறந்த நபரான காரைக்குடி சூடாமணிபுரம் 4 வது தெருவில் வசிக்கும் சேவியர் இமானுவேல் மனைவி தைனீஸ் மேரி வயது 63/2019 என்பவரின் உடலை அன்று மாலை 4.35 மணிக்கு பிரேத பரிசோதனை செய்த போது அவருக்கு ஒரு பெண்ணின் உடல் மல்லாந்த நிலையில் பின்னர் கூர்ஆய்வு மேடையில் மல்லாந்த நிலையில் கிடைக்கப்பட்டிருந்தது. உடல் முழுவதும் விரைப்பு தன்மை காணப்பட்டது, கண்கள் மற்றும் வாய் மூடிய நிலையில் இருந்தது, அவருக்கு கீழ்கண்ட வெளி காயங்கள் இருந்தது.

காயம் எண்.1 - தலையின் வலது பகுதியில் ஒரு சிறாய்ப்பு காயம் இருந்தது.

காயம் எண்.2 - தலையின் வலது பகுதியில் 20 x 20 செ.மீ அளவில் ரத்த கட்டு காயம் இருந்தது.

உடல் உள்உறுப்புகளை ஆராய்ந்ததில் நாவடி எலும்பு முழுமையாக இருந்தது. தலையின் இடது பகுதியில் பரைட்டல் எலும்பு மற்றும் டெம்போரல் எலும்பு உடைந்த நிலையில் இருந்தது. கபாலத்தின் அடிப்பகுதியில் இரத்தம் உறைந்த நிலையில் மூளை முழுவதும் காணப்பட்டது. மற்ற உடல் உள்உறுப்புகள் முழுமையாக இருந்தது. இருதைய அறைகளில் இரத்தம் எதுவும் காணப்படவில்லை. மேற்படி நபர் அதிகப்படியான இரத்த போக்கு, அதிர்ச்சியால் பிரேத பரிசோதனை செய்வதற்கு 4 முதல் 6 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கலாம் என்று நான் சான்று

வழங்கினேன். நான் வழங்கிய **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.3.**

**குறுக்கு விசாரணை**

இறந்த நபர் வயது முதிர்ந்தவர் என்றால் சரிதான். தலையில் ஏற்பட்ட காயங்களால் தான் மேற்படி நபர் இறந்திருக்கலாம் என்றால் சரிதான். மேற்படி காயங்கள் தன்னிச்சையாக சாலையை குறுக்கே கடந்து செல்லும் போது வாகன விபத்து ஏற்படும் போது இது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.15 11:30:38 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.